28th April 1959]

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

SRI A. VEDARATHNAM : தொழிலாளர்கள் ஆயுள் காலம் முடிய இருக்கிற அதே வேலையில் இருப்பதைக்காட்டிலும், அவர்களுக்கு ஓய்வு நேரத்தில் அவர்கள் செய்கிற தொழிலைக்காட்டிலும் திறமையான வேலையை செய்கின்ற ஆற்றலை பெறும்படியாக ஓய்வு நேர பள்ளிகளில் பயிற்சி கொடுத்தால் அவர்கள் அதிகச் சம்பளம் வாங்கும்படியாக செய்வது அரசாங்கத்தின் கடமை என்று அரசாங்கம் கருதவில்லையா ? அப்படி யானால் அந்தத் துறையில் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சொல்கிற யோசனை மிகவும் நல்லதுதான். இதைவிட முக்கியமாக இப் போது அபரென்டிஸ் கோர்ஸ் என்று இளைஞர்களுக்கு பயிற்சி கொடுக்கும் துறையில் ஈடுபட்டிருக்கிறோம். இந்த இளைஞர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்கவேண்டும். ஒரே சமயத்தில் எல்லாவற்றிலும் கவனம் செலுத்து வது முடியாது.

Free legal aid to Harijans

209 *Q*.—**SRI P. G. MANICKAM:** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் வருடத்திலே **Under the provisions of the untouchability (Offences) Act. 1955**-ன் கீழ் கோர்ட்டில் தொடரப்பட்ட எத்தனை வழக்குகளுக்கு ஹரிஜன இலாகா நிதியிலிருந்து இலவசமாக வக்கீல்கள் அமர்த்தப்பட்டனர் ?

(ஆ) இதற்காகச் செலவிடப்பட்டத் தொகை எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) The offences under the Untouchability (Offences) Act, 1955 are cognizable. The offenders are booked by the Police and the penal provisions of the Act are enforced in the Courts of law. As such, the question of legal aid in these cases does not arise.

Review of the Second Five-Year Plan

* 210 *Q*.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Chief Minister be pleased to place on the table of the House a general detailed review of the Second Five-Year Plan so far in this State?

THE HON. SRI C. SUBRAMANIAM : A copy [a] of the publication containing a detailed review of the progress under Second Five-Year Plan for 1956–57 and 1957–58 and the programme for 1958–59 is placed on the table of the House.

SRI K. SATTANATHA KARAYALAR : இங்கு மேஜைமேல் வைக்கப்பட்டிருப்பதில் 1956–57-ம் ஆண்டு ரெவின்யூவும், 1958–59-ம் ஆண்டுக்கான ப்ரோகிராமும் காணப்படுகிறது. ஒரு நிதி ஆண்டு

[a] Copies circulated to hon. Members separately.

ஆரம்ப காலத்தில் வருகிற ஆண்டுக்குள்ள ப்ரொகிராமை முன் கூட்டியே வைத்து அதேபோல் ஆண்டு முடிந்து 4, 5 மாதங்களுக்குள்ளாக அந்த ரெவ்ன்யூவைத்தர சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : During the consideration of the Budget, we have a detailed discussion about these various things and figures are given there. Therefore, I do not think that in any particular thing, certainly I will only be too glad to give a separate review is necessary but if hon. Members are interested information about it if it is available.

SRI P. S. CHINNADURAI : : இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 29 சத விகிதம் மொத்த உணவு தானிய உற்பத்தியை அதிகப்படுத்துவது என்ற திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நாம் சரியானபடி எட்டவில்லை என்று சென்ற இரண்டு ஆண்டு அறிக்கை கூறுகிறது. அதைக் குறித்து சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இம்மாதிரி " ப்ரொடக்ஷன் டார்கட் " பற்றி சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

SRI K. VINAYAKAM : Sir, whereas the Budget literature is a huge one containing lot of information regarding receipts, expenditure, revenue account, capital account, loan account, etc., it is not possible to dissect and decipher easily the exact plan that has to be executed during the year. Therefore, will the Government think of the possibility of issuing a separate brochure which will contain only development works that would be carried out under the Second Five-Year Plan.

THE HON. SRI C. SUBRAMANIAM : That is what we have published now—for two years review of the progress and for 1958–59 the programme. Next we will publish the review of the progress for the three years and the programme for 1959–60.

Formation of an Industrial Co-operative Society at Thorapadi Jail Colony

* 211 *Q.*—SRI S. R. MUNUSAMI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா வேலூர் தாலூகா தொரப்பாடி ஜெயில் காலனியில் ஓர் கூட்டுறவு கைத்தொழிற்சாலை அமைக்க 1957-ம் வருடம் நவம்பர் மாதம் கைத்தொழில் டைரக்டர் ஓர் கூட்டுறவு சங்கத்தை ஸ்தாபனம் செய்ய சிபாரிசு செய்து சர்க்காருக்கு அனுப்பியது உண்டா ?

(ஆ) அப்பாடியானால் அதன் பேரில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) No such proposal was received in November 1957. But, in September 1957, a proposal was received from the Assistant Director of Industries